செ.வெ.எண்.57 நாள்.30.01.2018.

# திருநெல்வேலி, பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் தேசிய தொழுநோய் ஒழிப்பு தின உறுதிமொழி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் தேசிய தொழுநோய் ஒழிப்பு தின உறுதிமொழி நிகழ்ச்சி இன்று (30.01.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தொழுநோய் ஒழிப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஏற்றுக் கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 644 நபர்களுக்கு தொழுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இதில் 555 பேர் முற்றிலும் சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு 178 நபர்களுக்கும், இவ்வாண்டு 76 நபர்களுக்கும் தொழுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ள. இதில் சிறுவர்கள் 11 பேரும், உடல் அங்ஹனம் உள்ள நபர்கள் 6 பேரும் ஆவர். இவ்வாண்டில் 89 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐந்து ஆண்டுகளில் 43 பேர் உடல் அங்ஹனத்துடன் கண்டறியப்பட்டுள்ளனர். (இவ்வாண்டு 6 பேர் உடல் அங்ஹனத்துடன் கண்டிறியப்பட்டுள்ளனர்) கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் MCR Foot wear, Self Care Kit 1447, RCS Reconstructive Surgery கடந்த ஐந்து ஆண்டுகளில் 9 நபர்களுக்கு செய்யப்பட்டுள்ளது. தொழுநோய் வராமல் நம்மால் தடுக்க முடியும். எப்படி போலியோ சொட்டு மருந்து கொடுத்து போலியோ ஊனத்தை தடுக்கிறோமோ, அதேபோன்று தொழுநோயை ஆரம்பத்தில் கண்டறிந்து அங்ஹனம் வராமல் தடுப்போம். கல்வித்துறை, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, பொதுமக்கள் ஆகியோர் இணைந்து பணியாற்றி தொழுநோய் இல்லா இந்தியா உருவாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டுமென பேசினார்.

நிகழ்ச்சியில், தொழுநோய் குறித்து நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசுகளையும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மற்றும் தொழுநோய் விழிப்புணர்வு குறித்த பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் சாராள் தக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இக்னேஷியஸ் கான்வென்ட் பள்ளி, மேரிஜார்ஜெண்ட் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை நர்சிங் கல்லூரி, ராணி–அண்ணா மகளிர் கல்லூரி, இதயஜோதி நர்சிங் கல்லூரி ஆகிய பள்ளி மற்றும் கல்லூரிகளை சார்ந்த 1800க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம்பகவர்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கண்ணன், தோல்நோய் பிரிவு முதன்மை மருத்துவர் மரு.நிர்மலா, திருநெல்வேலி மருத்துப் பணிகள் துணை இயக்குநர்கள் (தொழுநோய்) மரு.வே.கார்குழலி, (குடும்ப நலம்) மரு.எம்.வசந்தகுமாரி, (காசநோய்) மரு.எஸ்.சுபைர்அசன் முகமதுகான், மாவட்ட நலக்கல்வியாளர் திரு.அ.அருள்ராஜ், மாவட்ட கல்வி விரிவாக்க அலுவலர் திரு.அப்துல்காதர் உள்பட அலுவலர்கள், மருத்துவர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.